# முரசொலி

பக்கங்கள் நான்கு — விலை ரூபா; 5-00

முரசு 06 ஒலி 235 ஆங்கீரச ஆடி 13 ( 28 . 07 . 1992 ) செவ்வாய்


## கறுப்புப்பூனை விவகாரத்தை சுட்டிக்காட்டியவர் உடுகம்பொல

தென்னிலங்கையில் ஜே. வி. பி காலங்களில் இடம்பெற்ற பல அரசியல் கொலைகளுக்கு அரசினால் அமைக்கப்பட்ட கறுப்புப் பூனை படைகளே காரணம் என அரசு மீதான கொலை குற்றச்சாட்டை டி. ஐ ஜி உடுகம்பொலவே முதன் முதலாக பகிரங்கப்படுத்தினார்.

இன்று மரண கறுப்புப் பூனை படையை அமைப்பதில் ஜனாதிபதி பிரேமதாஸ நேரடியாக சம்பந்தப்பட்டவர் என்ற தகவலையும் இவர் வெளியிட்டதைத் தொடர்ந்து எதிர்கட்சிகள் பிரேமதாஸா பதவி விலகுமாறு கோரி பல போராட்டங்களை ஆரம்பித்தனர்.

1988, 89 ஆம் ஆண்டு காலப்பகுதியில் தேர்தலின் போது பல சுதந்திரக்கட்சி உறுப்பினர்களின் கொலைக்கு அரசின் கறுப்புப் பூனைப் படையே காரணம் என உடுகம்பொல சுமத்திய குற்றச்சாட்டை அரசு வன்மையாக மறுத்தது இதற்காக இவரை

— 04 ஆம் பக்கம் பார்க்க

# முன்னாள் டி. ஐ. ஜி. உடுகம்பொல நாட்டை விட்டுத் தப்பி ஓட்டம்

### உயரதிகாரிகள் உதவி இருக்கலாம்

அரசுக்கு எதிரான பல குற்றச்சாட்டுகளை அண்மைக் காலமாக வெளியிட்டு வந்த முன்னாள் பிரதி பொலிஸ் மா அதிபர் பிரேமதாஸ உடுகம்பொல நாட்டை விட்டுத் தப்பிச் சென்றுவிட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. இவர் எங்கு தப்பிச் சென்றார் என்பது குறித்தோ எப்படிப் பாதுகாப்புகளையும் மீறி நாட்டை விட்டுத் தப்பிச் சென்றார் என்பது குறித்தோ இதுவரை மர்மமாகவே உள்ளது,

இவர் அநேகமாக தமது மனைவி பிள்ளைகள் வசிக்கும் அமெரிக்காவிற்கு அல்லது கனடாவிற்கு சென்றிருக்கலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இவர் தப்பிச் செல்ல இவரின் கீழ் முன்னர் பணிபுரிந்து தற்போது உயரதிகாரிகளாக இருக்கும் பாதுகாப்பு அதிகாரிகள் உதவியிருக்கலாம் எனக் கூறப்படுகிறது

### கிளாலி படகுச்சேவை காற்றினால் நிறுத்தம்

நேற்றைய தினம் ஏற்பட்ட கடும் காற்று காரணமாக கிளாலியில் இருந்து பயணிகளை ஏற்றிச் செல்லும் படகுகளை செலுத்த முடியாது

— 04 ஆம் பக்கம் பார்க்க

### ★ விண்ணப்பதாரிகள் பலர் கல்வித்திணைக்களத்துடன் தொடர்பு கொண்டனர்

எழுதுவினைஞர் போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பித்தவர்கள் பலர் நூறு ரூபா பற்றுச்சீட்டு தொடர்பாக நேற்று யாழ் கல்வித்திணைக்கள பரீட்சைப் பகுதியுடன் தொடர்பு கொண்டதாக தெரிவிக்கப்படுகிறது.

ஒரு வர்த்தமானி வெளியிடப்பட்டால் அதில் குறிப்பிடப்பட்டவற்றை சம்பந்தப்பட்ட திணைக்களங்கள் நடைமுறைப்படுத்தவேண்டும் எனவும், தமக்கும் இதற்கும் தொடர்பு இல்லை எனவும் விண்ணப்பதாரிகளிடமும் பரீட்சைப்பகுதியினரால் தெரிவிக்கப்பட்டது. (06)

### காரைநகரில் இருந்து பீரங்கித் தாக்குதல்கள்

நேற்று முன்தினம் மாலை 6 30 மணியளவில் காரைநகரில் இருந்து திடீர் திடீரென கவிபர் தாக்குதல்களும் பீரங்கித் தாக்குதல்களும், அராலி மூளாய், பொன்னாலைப்பகுதிகளை நோக்கி ஏவப்பட்டன

— 4 ஆம் பக்கம் பார்க்க

### அயோத்தி விவகாரத்தினால் பிரதமர் - அர்ஜுன் சிங் மோதல்

அயோத்தி கோயில் விவகாரம் தொடர்பாக பிரதமர் நரசிம்மராவ் கையாண்ட விதம் குறித்து அவருக்கும் காங்கிரஸ் கட்சியில் அதிக செல்வாக்கு உடையவர் எனக் கருதப்படும் மனித மேம்பாட்டுத்துறை அமைச்சர் அர்ஜுன்சிங் இற்கும் இடையில் கருத்து மோதல்கள் எழுந்துள்ளன

பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றிய அமைச்சர் அர்ஜுன் சிங் "காங்கிரஸின்

— 4 ஆம் பக்கம் பார்க்க

### முதல் வாரத்தில் குமண

கொழும்பில் இருந்து உணவுப் பொருட்களை ஏற்றிக் கொண்டு குமண கப்பல் ஆகஸ்ட் முதல் வாரத்தில் பருத்தித்துறைக்கு வந்தடையும் என யாழ்செயலக வட்டாரங்கள் தெரிவித்தன 47

### ★ பரீட்சைக் கட்டண அறிவுறுத்தல் வராததால் யாழ். மாவட்டத் தபாலகங்களில் விண்ணப்பம் அனுப்பமுடியாநிலை

எழுதுவினைஞர் சேவைக்கான போட்டிப் பரீட்சைக்கு விவரங்கள் கிடைத்தும் யாழ் மாவட்டத்தில் இருந்து எண்ண பிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இதற்கு நூறு ரூபா பரீட்சைப் பற்றுச்சீட்டு தபால் விண்ணப்பத்துடன் இணைக்க வேண்டும்.

ஆனால் யாழ் மாவட்டத்தில் உள்ள தபாற்கந்தோரி கவில் இதனைப் பெறமுடியாது விண்ணப்பதாரிகள் நேற்று ஏமாற்றத்துடன் திரும்பியதாக தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பான அறிவுறுத்தல் கடிதங்கள் எதுவுமே யாழ் மாவட்ட தபாற் கந்தோர்களுக்கு கொழும்பில் இருந்து வந்து சேரவில்லை என தபால் திணைக்கள வட்

### ● கவிஞர் காசி ஆனந்தன் நூல் வெளியீட்டில் உரை புலிகளின் உருவாக்கத்தை தீர்க்கதரிசனத்துடன் பாடியவர்

"காசி ஆனந்தன் விடுதலைக் கவிஞராகவும் விடுதலைப் புலியாகவும் செயற்படுகிறார் தமிழ் உணர்வு குன்றாத நிலையில் செயற்படுகிறார்

கவிஞராகவும் திகழ்வதனால் இவரை தமிழரசு அரசு புரட்சிக்கவிஞர் என பட்டம் சூட்டி சிறப்புற்றது என நேற்று கவிஞர் காசி ஆனந்தனின்

கவிதை நூல் வெளியீட்டு வைபவத்தில் வெளியிட்டு உரையாற்றும்போது தமிழீழ விடுதலை புலிகளின் மூத்த உறுப்பினர் இளங்குமரன்

கான போட்டிப் பரீட்சைக்கு விவரங்கள் கிடைத்தும் யாழ் மாவட்டத்தில் இருந்து எண்ணிக்கை முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இதற்கு நூறு ரூபா பரீட்சைப் பற்றுச்சீட்டு தபாற் கந்தோர் ஒன்றில் பெற்ற வேண்டும்.

ஆனால் யாழ் மாவட்டத்தில் உள்ள தபாற்கந்தோர்களில் இதனைப் பெறமுடியாது விண்ணப்பதாரிகள் நேற்று ஏமாற்றத்துடன் திரும்பிச் சென்றதாகத் தெரி...

...வுறுத்தல் கடிதங்கள் எதுவுமே யாழ் மாவட்ட தபாற் கந்தோர்களுக்கு கொழும்பில் இருந்து வந்து சேரவில்லை என தபால் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன (06)

''காசி ஆனந்தன் விடுதலைக் கவிஞராகவும் விடுதலைப் புலியாகவும் செயற்படுகிறார் தமிழ் உணர்வு குன்றாத நிலையில் செயற்படுகிறார் தமிழுணர்ச்சி கொண்ட கவிஞராகவும் திகழ்வதனால் இவரை தமிழரசு அரசு புரட்சிக்கவிஞர் என பட்டம் சூட்டி சிறப்புற்றது என நேற்று கவிஞர் காசி ஆனந்தனின் தமிழன் கனவு என்னும் கவிதை நூல் வெளியீட்டு வைபவத்தில் வெளியீட்டு உரையாற்றும்போது தமிழீழ விடுதலை புலிகளின் மூத்த உறுப்பினர் திரு. இளங்குமரன்

04ஆம் பக்கம் பார்க்க

# பீப்பாய் குண்டுகள் குறித்து எமக்கு தெரியாது

## படை அதிகாரிகள் செய்தியாளரிடம் கூறினர்

ஸ்ரீலங்கா விமானப்படையின பீப்பாய் குண்டுகள் வீசப்படுவதை ஸ்ரீலங்காப் படை அதிகாரிகள் இருவர் செய்தியாளர் மாநாடு ஒன்றில் மூடி மறைக்க பலத்த பிரயத்தனங்களை செய்தனர்

பீப்பாய் குண்டு வீச்சு குறித்து செய்தியாளர்கள் அடுத்தடுத்து எழுப்பிய கேள்விகளினால் அந்த இரு அதிகாரிகளும் திணறியதாக தெரிவிக்கப்படுகிறது

விமானப்படையைச்சேர்ந்த விங்கொமாண்டர் ஜெயலத் வீரகொடி, இராணுவப் பேச்சாளர் கேணல்முனசிங்க நடத்திய இந்த செய்தியாளர் மாநாட்டில் அண்மையில் சீனன்குடா விமானத்தளத்தில் இடம்பெற்ற குண்டு வெடிப்பிற்கு பீப்பாய் குண்டு தானே காரணம் என செய்தியாளர்கள் கேள்வி எழுப்பினர்

இதற்கு அவ்வதிகாரிகள் பதிலளித்தபோது ''பீப்பாய் குண்டு என்ற ஒரு பொருளே எம்மிடம் இல்லை அப்படி எதுவும் நம் தயாரிக்கவும் இல்லை'' என்றனர்

விமானங்கள்வீசிய பீப்பாய் குண்டுகளை தாம் நேரில் கண்டதாக செய்தியாளர்கள் கூறினர் இதற்கு அதிகாரிகள் பதிலளிக்கும்போது அது புலிகளின் குண்டாக இருக்கலாம் என்றனர்

முன்னர் 10கிலோ பீப்பாய் குண்டு செய்யப்பட்டது இப்போது 30கிலோ குண்டு செய்யப்படுகிறது வவுனியா விமானப்படை தளத்தில் விமானம் ஒன்றினருகே பீப்பாய் குண்டுகள் இருக்கும் படங்கள் எம்மிடம் உள்ளன இரத்மலானை கட்டுநாயக்கா, அநுராதபுர விமானத்தளங்களில் இவை உற்பத்தியாகின்றன கடந்த ஜூன் மாதம் 5ஆம் திகதி கொழும்பில் ஏற்பட்ட வெள்ளத்தினால் 300 கிலோ நிறையுடைய குண்டுகள் நீரில் அமிழ்ந்தன இவற்றை அகற்றுமாறு அப்போது அறிவுறுத்தப்பட்டது என செய்தியாளர்கள் பல தகவல்களை வெளியிட்டபோது பீப்பாய் குண்டு பற்றி எமக்கு எதுவும் தெரி

04 ஆம் பக்கம் பார்க்க

சொட்டு நீரும்
எங்கள் சொத்தே

## குருநகர் கலை அரங்கில் ''போர்க்களம்'' நாட்டுக் கூத்து

''போர்க்களம்'' என்னும் புனித யாகப்பர் வரலாற்று நாட்டுக் கூத்து இன்று செவ்வாய்க்கிழமை மாலை 6 30 மணிக்கு குருநகர் கலை அரங்கில் மேடையேறவுள்ளது.

குருநகரின் மறைந்த தலைசிறந்த ஏழு நாட்டுக் கூத்து அண்ணாவிமார்களின் நினைவாக குருநகர் புனித யாகப்பர் கலை மன்றத்தினால் இந்த நாட்டுக் கூத்து வழங்கப்படுகிறது.

நல்லூர் அருள்மிகு ஸ்ரீ சட்டநாதர் ஆலய புதிய கைலாச வாகன வெள்ளோட்ட விழா நிகழ்ச்சியும் சிற்பாச்சாரியாருக்கு பாராட்டும் வைபவமும், கைலாச வாகன உற்சவமும் இன்று இடம் பெறுகிறது.

இன்று செவ்வாய்க்கிழமை 6 30 மணிக்கு கைலாசவாகனத்தை அமைத்த சிற்பாச்சாரியார் கௌரவிக்கப்படவுள்ளார். தொடர்ந்து புதிய கைலாச வாகனத்தில் அம்பிகை வீற்றிருக்க கைலாசவாகனம் வீதிவலம் வரும்.


## சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

தோட்டக்காணி 8 பரப்பு கிணற்றுப் பங்குடன் அளவாய் தெற்கில் கிராம சபைக்கு அருகாமையில் விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:- திருமதி பசுபதி பிரமணியம் (ஆசிரியர்) "அன்னை அபிராமி" அளவாய் தெற்கு, அளவாய்

07068


...பட்டு வரும் 100 ரூபா அலவன்ஸ், ஆரம்ப அடிப்படைச் சம்பளமாக ரூபா 3000/= மும் அதற்குக் குறைவாகவும் பெறுபவர்களுக்கும் வழங்கப்படவேண்டும் என வட கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சு ...களுக்கு மட்டுமே வழங்கப்பட்டதும் ரூ 3000/= ஆரம்ப அடிப்படைச் சம்பளமாக உள்ளவர்களுக்கு வழங்கப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. 12

# தீவக விவசாய நிலையங்களை இயங்க வைக்கக் கோரிக்கை

வேலணை, புங்குடுதீவு ஆகிய இடங்களில் இயங்கிய சமநல சேவை நிலையங்களை யாழ்ப்பாணத்தில் பொதுவான ஓர் இடத்தில் இயங்க வைக்குமாறு தீவக இடம் பெயர்ந்தோர் நலன் காக்கும் கழகத்தினர் யாழ் மாவட்ட கமநல சேவை உதவி ஆணையாளரைச் சந்தித்துக் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தீவகத்திலிருந்து சுமார் 10.000 விவசாயக் குடும்பங்கள் இடம் பெயர்ந்திருப்பது இங்கு குறிப்பிடத்தக்கது. 28

# சமய, பண்ணிசைப் போட்டிகள்

எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் 5 ஆம் திகதி சுந்தரமூர்த்தி நாயனாரின் குருபூசை தினத்தை முன்னிட்டு கொழும்புத்துறை மேற்கு இந்து இளைஞர் மன்றம் சமய அறிவு, பண்ணிசை போட்டிகளை நடத்தவுள்ளது.

யாழ் கோட்ட தெற்கு கொத்தணிக்கு உட்பட்ட பாடசாலை மாணவர்கள் இதில் பங்குபற்றலாம் எனவும் மேல்பிரிவு, மத்திய பிரிவு கீழ்பிரிவு ஆகிய பிரிவுகளில் போட்டிகள் இடம் பெறும் எனவும், இப்போட்டிகள் யாவும் கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயத்தில் எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் 2 ஆம் திகதி பிற்பகல் 2 மணிக்கு இடம்பெறும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (47)

...சந்தா மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் பன்ன வேலைப் பயிற்சி நேற்று திங்கட்கிழமை பிற்பகல் 4 மணிக்கு தென்மராட்சி கிராம அபிவிருத்தி உதவி யோகத்தரால் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இப் பயிற்சியைப் பனை அபிவிருத்தி சபையின் ஆதரவில் நடத்துவதற்கு அச்சபை பூரண சம்மதத்தைத் தெரிவித்துள்ளது. 25

...யாழ் நகரில் தங்கியிருக்கவே விருப்பம் கொண்டுள்ளதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகிறது.

அண்மையில் கொழும்பில் 500 குடிசைகள் அமைக்கப்பட்டு தீவுப்பகுதி மக்களை யாழ் செயலக புனர்வாழ்வு இலையால் அங்கு குடியமர்த்தப்பட்டனர்.

யாழ் நகரில் உள்ள அகதி முகாம்களில் தங்கியிருக்கும் தீவுப்பகுதி மக்கள் கொழும்பில்...

...திகள் எல்லாவும் ஏற்கனவே செய்து கொடுக்கப்பட்டுள்ளதாகவும் இவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. 47

## விசேட கூட்டம்

யாழ் மாவட்ட நல்லூர் திரி சாரணர்கள் அனைவரையும் நாளை புதன் கிழமை மாலை 5 மணிக்கு யாழ் செங்குந்த இந்துக் கல்லூரியில் நடைபெறும் கூட்டத்திற்கு வருமாறு அதன் செயலாளர் கேட்டுள்ளார்.

# ஈராக் மீதான போரைக் கைவிட நேச நாடுகள் விரும்பவில்லை

- சதாம் ஹுசெய்ன்

ஐக்கிய நாடுகள் சபை ஈராக் விடயத்தில் பாரபட்சமாக நடப்பதாக ஈராக் ஜனாதிபதி சதாம் ஹுசெய்ன் நேற்று குற்றம் சாட்டினார்.

இஸ்ரேல் ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச்சபையின் பல தீர்மானங்களை உதாசீனப்படுத்தி வருவதற்கு எந்தவித நடவடிக்கையையும் எடுக்காத ஐ.நா.சபை ஈராக் மீது வேண்டுமென்றே பல தடைகளை அமுல்படுத்தி பாரபட்சமாக நடந்து வருகிறது எனவும் அவர் குற்றம் சாட்டினார்.

ஈராக் மீதான போரைக் கைவிட நேசநாட்டுப்படைகள் விரும்பவில்லை எனவும் சதாம் ஹுசெய்ன் தெரிவித்தார்.

இதேவேளை வளைகுடாவில் மீண்டும் போர் நடந்தால் நியாயபூர்வமானதாகக் குவைத் இல்லை ஈராக் ஜனாதிபதி சதாம் ஹுசெய்னாகத்தான் இருக்குமென அமெரிக்க இராணுவ அமைச்சர் கூறியுள்ளார். இதன் மூலம் புதிய போர் நடத்தால் சதாமை ஈராக்கிலிருந்து அகற்றும் வகையில் புதிய போர்த்திட்டங்கள் அமையுமெனவும் கூறப்படுகிறது.

மேலும் மீண்டும் வளைகுடாவில் போர் மூண்டால் துருக்கி நேச நாட்டுப்படைகளுடன் சேர்ந்து கொள்ளுமெனத் துருக்கிப் பிரதமர் கூறியுள்ளார்.

★ திருமலை நகரில் அமைந்திருந்த

# சிங்கள மீனவக் குடியிருப்பு தீக்கிரை! படகுகளும் சேதம்!!

திருகோணமலையில் சிங்கள மீனவர்கள் குடியிருந்த குடியிருப்புப்பகுதி பொன்று தீக்கிரையாகியுள்ளதாக அறிவிக்கப்படுகின்றது.

திருகோணமலை நகரில் சின்னக்கடை மீன் சந்தைக்கு முன்பாக கோணேஸ்வரர் ஆலய வீதியில் முற்றவெளியின் ஒரு பகுதியில் அமைக்கப்பட்டிருந்த சில மீனவர் குடியிருப்பே தீக்கிரையாகியுள்ளது.

இச்சம்பவத்தில் சிங்கள மீனவர்களின் 40 குடிசைகள் நாசமாகின, பல மீன்பிடிப்படகுகளும் தீயினால் சேதமாகின

கடந்த ஞாயிற்றுக்கிழமை பகல் 11. 45 மணியளவில் இச்சம்பவம் நிகழ்ந்துள்ளது.

திருமலை கடற்படைத் தள தீயணைப்புப் படையினர் உடனடியாக விரைந்து அழைக்கப்பட்டனர்.

பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு உடனடியாக நிவாரணம் வழங்குமாறு திருமலை அரச அதிபர் மேலிடத்தால் பணிக்கப்பட்டுள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

புதிதாக அமைக்கப்பட்டுள்ள இச் சிங்கள மீனவக் குடியிருப்புப் பகுதிக்கு அண்மையில் இருந்து தான் கோணேசப் பெருமான் கடலில் மூழ்கியுள்ள முன்னைய கோணேசர் ஆலயப் பகுதிக்கு தெப்பத்தில் வருடாவருடம் உற்சவ காலங்களின் போது கொண்டு செல்லப்படுவதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

## மாதாந்த உதவிப்பணம்

வடமராட்சி தெற்கு, மேற்கு உதவி அரசாங்க அதிபர் அலுவலகப் பகுதிகளில் பொதுசன மாதாந்த உதவிப்பணம் பெறுபவர்களுக்கான மே, யூன் மாதங்களின் பொதுசன மாதாந்த உதவிப் பணம் கரவெட்டி பிரதம தபாலகத்திலும் உப தபாலகங்களிலும் வழங்கப்பட்டு வருகின்றன இப் பகுதிகளில் உள்ள பொதுசன மாதாந்த உதவிப் பணம் பெறும் வறியவர்கள் தத்தமது பகுதி தபாலகங்களில் உதவிப் பணத்தைப் பெற்றுக் கொள்ளலாமென அறிவிக்கப்பட்டுள்ளது (11)

நயன்மார்கட்டு ஸ்ரீ இராஜ இராஜேஸ்வரி (பேய்ச்சி) அம்பாள் ஆலய
ஏழாம் திருவிழா திருப்பூந்தண்டிகை

### வரம் தரும் சக்தி

இராகம் : கல்யாணி — தாளம்: ஆதி

பல்லவி

மரகதப்பூந் தண்டிகையில் மாட்சியொடு காட்சி தந்து
வரமதெமக் கருள்வாள் – வடிவழகாம்பிகை
(மரகத)

அநுபல்லவி

தேசமெலாம் புகழ்ந்து ஏத்திடும் திருச்செல்வி
பாசவினையறுத்து பக்தரைக் காத்திட
(மரகத)

சரணம்

நன்மணி நாதம் முழங்கி நல் லிசை ஒலிக்க
பொன் முடி தரித்தழகுக் கமலமுகம் ஜொலிக்க
உன் விழிமலர் பொங்கும் கருணையில் குளிக்க
இன்முக மலர்த் தடியார் இதயங்கள் களிக்க
(மரகத)

நாயன்மார்கட்டு இ குகதாசன்

## சேவையிலுள்ளவர்களுடன் ஒய்வுபெற்றவர்களும் பங்கு பற்றுவர்

இவ்வாண்டு அரசாங்க சேவை விளையாட்டுப் போட்டி 29 ஆம் திகதி கொழும்பில் சுகததாச விளையாட்டரங்கில் ஆரம்பமாகவுள்ளது.

அமைச்சுக்கள், அரசாங்கத் திணைக்களங்கள் ஆகியவற்றிக் கமைவாற்றும் பெருந்தொகையான விளையாட்டு வீரர்கள் இதிற் கலந்து கொள்ளவுள்ளனர்.

அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள விளையாட்டுப்போட்டிகளில் ஓய்வுபெற்ற அரசாங்க ஊழியர்களும் பங்கு பற்ற அனுமதிக்கப்படவுள்ளனர்

அத்துடன் தனியார் துறையினருக்கும், அரச துறையினருக்கும் இடையில் மாகாண பிரதேச மட்டங்களிலும் போட்டிகள் நடாத்தப்படவுள்ளன.

## ஆயுதங்களை உற்பத்தி செய்ததாக இரு இலங்கையர்மீது குற்றச்சாட்டு

சட்டவிரோதமாக ஆயுதங்களை உற்பத்தி செய்ததாக இரு இலங்கையர் மீது சென்னையில் உள்ள விசேட நீதிமன்றில் வழக்குத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

ஆயுதங்களையும், நாட்டு வெடிகுண்டுகளையும் சட்டவிரோதமாக உற்பத்தி செய்தார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் இவர்கள் இருவரும் கோயம்புத்தூர் பகுதியில் வைத்துக் கைது செய்யப்பட்டிருந்தனர்.

இதே வழக்கில் இவர்களுடன் தமிழகத்தைச்சேர்ந்த எழுவர் மீதும் இதே குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது.

## பல்கலைக்கழக அனுமதியில் நீதிமன்ற ஆணை மீறப்படவில்லை

பல்கலைக்கழக அனுமதி விவகாரத்தில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு உயர்நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவுகளிலிருந்து எவ்விதத்திலும் விலகிச்செல்லவில்லை என உயர்கல்வி அமைச்சர் ஹமீத் பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்,

நீதிமன்றத்தினால் வகுக்கப்பட்ட வழிகாட்டல்களை மானிய ஆணைக்குழு உறுதியாகப் பின்பற்றுகிறது எனவும் அவர் அங்கு தெரிவித்தார்.

## ரோகணவின் சகோதரன், மைத்துனர்கள் கடத்தப்பட்டனர்

ஜனதா விமுக்திப் பெரமுனவின் தலைவரான கொல்லப்பட்ட ரோகண விஜயவீரவின் சகோதரனும், இரு மைத்துனர்களும் கடத்திச் செல்லப்பட்டுள்ளனராகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இவ் விவகாரம் தொடர்பாக உயர்மட்ட விசாரணையை மேற்கொள்ளுமாறு பொலிஸார் பணிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது

ரோஹண விஜயவீரவின் மனைவி, பிள்ளைகள், மாமியார் ஆகியோர் தற்பொழுது திருமலை கடற்படைத் தளத்தில் கடற்படையினரின் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளமை தெரிந்ததே.

## பாக்.சிந்து மாகாணத்தில் நெருக்கடி நிலை அதிகரிப்பு

பாகிஸ்தான் சிந்து மாகாணத்தில் பாராளுமன்ற உறுப்பினர்கள் தொடர்ச்சியாக ராஜினாமாச் செய்து வருவதாலும் இராணுவ முன்னிலை அதிகரித்துள்ளதாலும் நெருக்கடி நிலை மேலும் வலுப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஏற்கெனவே பத்து எம்பிக்கள் ராஜினாமாச் செய்துள்ளதாகவும் மேலும் 12 பேர் இத்தகைய தீர்மானத்தை மேற்கொள்ளலாம் என எதிர்பார்க்கப்படுவதாகவும் அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

அங்கு கூட்டங்கள் ஊர்வலங்கள் நடத்துவதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ள போதிலும் தமது எதிர்ப்பு நடவடிக்கையில் மாற்றமேது மில்லை என எதிர்க்கட்சிகள் உறுதியாகத் தெரிவித்துள்ளன.

## இவ்வார இறுதிக்குள்

யாழ் செயலக புனர்வாழ்வுப் பகுதியினரின் பரிசீலனையில் இருக்கும் தீவகப் பகுதியில் இருந்து இடம்பெயர்ந்த மக்களின் "இ" உலர் உணவு அட்டைகள் இவ்வார இறுதிக்குள் யாழ் செயலக புனர்வாழ்வுப் பகுதியால் அவ்வப் பகுதி கிராம சேவையாளர்களிடம் ஒப்படைக்கப்பட வேண்டும் என செயலக வட்டாரம் தெரிவித்தது (47)

## பாடசாலையை விட்டு விலகியோருக்கு வடமராட்சியில் ஆங்கிலப்பயிற்சி

பாடசாலையை விட்டு விலகிய இளைஞர், யுவதிகளின் ஆங்கில அறிவை மேம்படுத்து முகமாக யாழ். கல்வித் திணைக்கள முதியோர்கல்விப் பிரிவு வடமராட்சியில் நான்கு பாடசாலைகளில் ஆங்கில வகுப்புகளை நடாத்தவுள்ளது.

வடமராட்சி மகளிர் கல்லூரி, நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம் உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி, பருத்தித்துறை மேலைப்புலோலி மகா வித்தியாலயம் ஆகிய நான்கு பாடசாலைகளிலுமே இளைஞர் யுவதிகளுக்கான சனி, ஞாயிறு ஆங்கில வகுப்புகள் நடைபெறவுள்ளன.

இவ் ஆங்கில வகுப்புகளை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகளை வடமராட்சிக் கல்விக்கோட்ட ஆங்கிலக் கல்வி ஆலோசகர் திருமதி ஜெயபூபதி குலசிங்கம் மேற்கொண்டுள்ளார்.

பாடசாலையை விட்டு விலகிய 25 வயதிற்குட்பட்ட இளைஞர், யுவதிகள் இவ் ஆங்கில வகுப்பில் சேர்ந்து கொள்ள விண்ணப்பிக்கும்படியும் விண்ணப்பங்களை இந்தப் பாடசாலைகளின் அதிபர்களிடம் கையளிக்குமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. (11)

## ஏற்றுமதியை அதிகரிப்பதற்காக புதிய வடிவமைப்பில் பனம் உற்பத்திப் பொருள்கள்

பனம் பொருள் அபிவிருத்திச்சபை பனையிலிருந்து உற்பத்திசெய்யப்படும் பொருள்களை ஏற்றுமதி செய்யும் திட்டமொன்றை ஆரம்பித்துள்ளது.

பனை ஓலையிலிருந்து உற்பத்தி செய்யப்படும் பொருள்கள் இவற்றில் முக்கியமானவையாக அமையும்

அமெரிக்கா, பிரிட்டன், நெதர்லாந்து, பெல்ஜியம் ஆகிய நாடுகளுக்கு இவை ஏற்றுமதி செய்யப்படவுள்ளன,

வெளிநாட்டுக் கோரிக்கைகளை அதிகரிக்கும் பொருட்டு பனம் பொருள் உற்பத்திகளில் புதிய வடிவமைப்பை ஏற்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது தேசிய வடிவமைப்பு நிறுவனத்தின் ஒத்துழைப்பை இதன் பொருட்டு பனம் பொருள் அபிவிருத்திச்சபை கோரும் பெற்றுக் கோரியுள்ளது.

## 'கௌரவ பேச்சாளர் தினம்' இங்கும் நடத்த ஏற்பாடு

யாழ் றோட்டரி கழகம் மக்களிடையே பகுத்தறிவை வளர்க்கும் நோக்குடன் 'கௌரவ பேச்சாளர் தினம்' என்ற புதிய நிகழ்ச்சி யொன்றை அறிமுகம் செய்யவுள்ளது

சமூகத்திலுள்ள கல்விமான்கள் தம்முடன் தொடர்பான துறைபற்றிய அனுபவங்களை இந் நிகழ்ச்சியின் போது மற்றையவர்களுடன் பகிர்ந்து கொள்ளுவர்.

பிரதி மாதமும் இறுதி வியாழன் தோறும் தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் இந்த நிகழ்ச்சிகளை நடத்த ஏற்பாடாகியுள்ளது,

இத் தொடரின் முதலாவது அனுபவப் பகிர்வு எதிர்வரும் 30 ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு யாழ். ஞானம்ஸ் ஹோட்டலில் நடைபெறும்.

அன்றைய தினம் அருள் திரு டேமியன் அடிகளார் அடிப்படைத் தொடர்பு

## கடுநிதி அனுப்பப்பட்டது

## தேரோக்களை விட்டு கொண்டா

பாடசாலைகளிலுமே இனை ஞாயிறு தினங்களுக்கான சனி, ஞாயிறு ஆங்கில வகுப்புகள் பாடசாலைகளின் அதிபர்களிடம் கையளிக்குமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. (11)

## தேரோக்களை விட தொண்டா நாட்டில் சக்திமிக்கவர்

### - பௌத்த காங்கிரஸ் தலைவர்

இந்த நாட்டிலுள்ள பௌத்த தேரோக்களை விட அமைச்சர் தொண்டமான் சக்திமிக்கவராக விளங்குகிறார் என அகில இலங்கை பௌத்த காங்கிரஸின் தலைவர் பேராசிரியர் ஆரியபால கடந்த சனிக்கிழமை கொழும்பில் நடைபெற்ற பௌத்த காங்கிரஸின் மாநாட்டில் உரையாற்றுகையில் தெரிவித்தார்.

இ.தொ.கா. தலைவரும் கிராமிய தொழிற்துறை அமைச்சருமான தொண்டமான் மலையகத்தில் தனிப் பெரும் செல்வாக்குடன் விளங்கி வருவதும், ஆட்சிப் பீடத்திலமரும் எந்தவொரு பெரும்பான்மைக் கட்சிக்கும் இ.தொ.கா.வின் ஆதரவு இன்றியமையாதது இருப்பதுமே இதற்குக் காரணமெனவும் தெரிவிக்கப்பட்டது.

## நின்றுகொண்டு பயணம்செய்வோர் தொகையை குறைக்க முடிவு

தனியார் பஸ்களில் நின்று பயணம் செய்வோரின் தொகையைக் கட்டுப்படுத்த அரசு முடிவெடுத்துள்ளது.

ஆசனங்களுக்குப் புறம்பாக 25 சதவீதமான பிரயாணிகள் மட்டுமே இதன்படி தனியார் பஸ்களில் இனிமேல் நின்றுகொண்டு பயணம் செய்வதற்கு அனுமதிவழங்கப்படுவர்.

50 சதவீதமான பிரயாணிகளை நின்று கொண்டு பயணம் செய்ய அனுமதிக்கும் தற்போதைய முறை இதன்படி இனிமேல் இரத்துச் செய்யப்படவுள்ளது.

... அமையும் அமெரிக்கா, பிரிட்டன், நெதர்லாந்து, பெல்ஜியம் ஆகிய நாடுகளுக்கு இவை ... ஒத்துழைப்பை இதன் பொருளுதவி பணம் பொருள் அபிவிருத்திச்சபை கொழும்பிற் கோரியுள்ளது.

## நாவற்குழி தீவகப் பாடசாலைக்கு சுழற்சிமுறையில் ஆசிரியர் சேவை

நாவற்குழியில் உள்ள தீவக இடம்பெயர்ந்தோர் குடியேற்றத் திட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள பாடசாலைக்கு 3 ஆம் தவணைக்குரிய ஆசிரியர்களை சுழற்சி முறையில் வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக வேலணைக் கோட்டத்தின் அதிபர்கள் மட்டத்திலான கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

மேற்படி பாடசாலைக்கு சுழற்சி முறை மூலமே தீவகப் பகுதி ஆசிரியர்கள் சேவைக்கு வழங்கப்பட்டுவருவது குறிப்பிடத்தக்கது. 28

## புதிய சப்பர வெள்ளோட்ட விழா

வண்ணார்பண்ணை வடமேற்கு அருள்மிகு ஸ்ரீவீரமாபிடாரி அம்மன் ஆலய புதிய சப்பர வெள்ளோட்ட விழா நாளை புதன்கிழமை மாலை நடைபெறவுள்ளது.

நாதஸ்வர கானகலாநிதி என். கே. பத்மநாதனின் நாதஸ்வரக் கச்சேரியும் இடம்பெறவுள்ளது.

## கட்டுநிதி அனுப்பப்பட்டது

யாழ் மாவட்ட ஆசிரியர்களின் ஆடி 92 இற்குரிய சம்பளத்தை வழங்குவதற்கான கட்டுநிதி வடகிழக்கு மாகாண கல்வி அமைச்சினால் கடந்த வாரமளவில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் இக்கிழமை ஆசிரியர் சம்பளம் வழங்கக்கூடியதாக இருக்கும் எனவும் திருகோணமலை கல்வி அமைச்சு செய்திகள் தெரிவிக்கின்றன. (12)

ஹோட்டலில் நடைபெறும்.

அன்றைய தினம் அங்கு திரு டேமியன் அடிகளார் அடிப்படைத் தொடர்பு சாதனம் பற்றிய தகவல்களைப் பரிமாறுவார்.

---

## முஸ்லிம்கள் கடத்தல்

காத்தான்குடியைச் சேர்ந்த ஐந்து முஸ்லிம்கள் கடத்திச் செல்லப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது. இச்சம்பவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை அதிகாலை நிகழ்ந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

### ★ கடந்த நான்கு வருடங்களில்

## நாட்டின் பாதுகாப்பு செலவினம் 1200 கோடியினால் அதிகரிப்பு!

இலங்கையின் பாதுகாப்புச் செலவினம் என்றுமில்லாத அளவிற்கு தற்பொழுது உயர்ந்துள்ளதாக ஜனாதிபதி பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் கொழும்பில் இலங்கை [illegible] சிகிச்சை மருத்துவர்கள் சங்கக் கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

1988 ஆம் ஆண்டு நாட்டின் பாதுகாப்புச் செலவினம் 800 கோடியாக இருந்தது.

தற்போது அது 2000 கோடியாக உயர்ந்துள்ளது. வடக்கு கிழக்கில் இடம்பெறும் தேவையற்ற யுத்தத்தினாலேயே நாட்டின் பாதுகாப்புச் செலவினம் இவ்வாறாக, மிகவும் உயர்ந்து நாட்டையே பாதிக்கும் அளவுக்கு வந்துள்ளது எனவும் ஜனாதிபதி அங்கு தெரிவித்தார்.

# பார்ஸிலோனா ஒலிம்பிக் போட்டியில் இளைஞரின் சாதனை வலுக்கிறது

கடந்த இரு நாளாக நடைபெறும் ஒலிம்பிக் போட்டிகளில் 20 வயதுக்கு உட்பட்ட வீரர்களும் வீராங்கனைகளுமே அதிக சாதனைகளை நிகழ்த்தி வருவதாக தெரிவிக்கப்படுகிற.

நேற்று முன்தினம் முடிவான 9 இறுதிப் போட்டிகளில் 5 தங்கப்பதக்கங்களை 20 வயதுக்கு உட்பட்ட வீரர்களும் வீராங்கனைகளுமே பெற்றனர்.

ஒலிம்பிக் வரலாற்றில் முதற் தடவையாக துப்பாக்கி சுடும் போட்டியில் வயதில் குறைந்தவர் தங்கம்பெற்றார் 16 வயதான சி. ஐ. எஸ் எனப்படும் முன்னாள் சோவியத்தின் குடியரசுகளின் சார்பில் போட்டியிட்ட கொக்ஸ் ரங்கிரைன் லொகாசிக் எனும் இளைஞர் தங்கப்பதக்கத்தை பெற்றார்.

டைவிங் போட்டியில் சீனாவைச் சேர்ந்த 13 வயது பூ ன்யா எனும் சிறுமி தங்கப்பதக்கம் பெற்றமை குறிப்பிடத்தக்க அம்சமாக இருந்தது.

இதனிடையே நேற்று நடைபெற்ற 100 மீற்றர் ஆண்கள் நீச்சல் பூர்வாங்க போட்டியில் இலங்கையரான ஜூலியன் போலிங் 5 ஆவதாக வந்தார் இதனால் அவர் இறுதிச்சுற்றுப் போட்டியிடும் தகுதியை இழந்தார்.

நேற்று 12 இறுதிப் போட்டிகள் நடைபெற்றன இதில் முதல் இரண்டு தங்கப்பதக்கங்களை சி. ஐ எஸ் எனப்படும் முன்னாள் சோவியத் குடியரசுகளைச் சேர்ந்த வீரரும் வீராங்கனையும் துப்பாக்கி சுடும் போட்டியில் பெற்றுக் கொண்டனர்

பெண்களுக்கான நீச்சல் போட்டி ஒன்றில் ஜப்பான் தனது முதலாவது தங்கத்தை பெற்றது இயோசாக்கி எனும் ஜப்பான் வீராங்கனை இப்போட்டியின் மூலம் புதிய ஒலிம்பிக் சாதனையை ஏற்படுத்தினார்

ஆண்களுக்கான நீச்சல் போட்டியில் அமெரிக்கா இரண்டாவது தங்கத்தை பெற்றது

இதனிடையே கடந்த ஜூனில் நடைபெற்ற வைத்திய சோதனைப்படி 5 நைஜீரிய வீரர்கள் போதைப் பொருள் பாவனை உள்ளவர்களாக காணப்பட்டு போட்டிகளிலிருந்து நீக்கப்பட்டனர்.

## பார்ஸிலோனா ஒலிம்பிக் - 92 பதக்க விவரம்

| | தங்கம் | வெள்ளி | வெண்கலம் |
|---|---|---|---|
| சி. ஐ. எஸ் முன்னாள் சோவியத் குடியரசுகள் | 04 | 01 | — |
| அமெரிக்கா | 03 | 01 | 02 |
| சீனா | 02 | 04 | — |
| பல்கேரியா | 01 | 01 | — |
| ஹங்கேரி | 01 | 01 | — |
| ஜேர்மனி | 01 | 01 | 03 |
| அவுஸ்திரேலியா | 01 | — | 01 |
| தென்கொரியா | 01 | — | — |
| ஜப்பான் | 01 | — | — |
| பிரான்ஸ் | — | 02 | 01 |
| சுவீடன் | — | 01 | 01 |
| இத்தாலி | — | 01 | 01 |
| சுவேட்சை யூகோஸ்லேவியா | — | — | 01 |
| நெதர்லாந்து | — | — | 01 |
| பின்லாந்து | — | — | 01 |
| ருமேனியா | — | — | 01 |
| மொங்கோலியா | — | — | 01 |

## புதிய விலைக்கு விற்குமாறு வர்த்தகருக்கு அறிவுறுத்தல்

தற்போதைய போர்க்கால சூழ் நிலையில் யாழ் குடா நாட்டில் உள்ள வர்த்தகர்கள் வெளியிலிருந்து கொண்டுவரும் மண்ணெண்ணெய், தேங்காய் எண்ணெய் என்பவற்றை மறு அறிவித்தல் வரை கீழ்க்கண்ட விலைகளில் விற்பனை செய்யுமாறு அறிவுறுத்தப்படுகின்றனர்.

மண்ணெண்ணெய் ஆகக்கூடிய சில்லறை விலை ஒரு லீற்றர் 30 ரூபா, தேங்காய் எண்ணெய் ஆகக்கூடிய சில்லறை விலை ஒரு லீற்றர் 65 ரூபா

## கோப்பாய் விவசாயிகளுக்கு 3000 ரூபா கடன் உதவி

கோப்பாய் மக்கள் நலன் காக்கும் பிரிவு தமது சங்க அங்கத்துவமுள்ள 39 விவசாயிகளுக்கு ஒருவருக்கு தலா மூவாயிரம் ரூபா வீதம் சுழற்சி முறையில் கடன் வழங்க விருப்பதாக சங்க செயலாளர் கணேசலிங்கம் தெரிவித்துள்ளார்.

இதேபோல ஆடிப்போக பயறு விதை உற்பத்தியை ஊக்குவிக்குமாறு 175 விவசாயிகளுக்கு மண்ணெண்ணெய் பசளை, பயறு என்பனவும் வழங்கப்படவுள்ளன. 06

## மேசன், தச்சு பயிற்சிக்கு பயிற்சியாளர் குறைவு

யாழ் மாவட்டத்தில் தேசிய பயிலுநர் அதிகாரசபையால் நடத்தப்படும் மேசன், தச்சுத் தொழில் பயிற்சிக்கு சேருவோர் தொகை குறைந்து வருவதாக பயிலுநர் சபையின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்

இப்பயிற்சி யாழ் தொழில் நுட்பக் கல்லூரியில் நடைபெற்று வருவதாகவும் பயிற்சிக் காலத்தில் நாள் ஒன்றுக்கு 30 ரூபா ஊக்குவிப்புப் படியாக வழங்கப்பட்டுவருவதாகவும் பயிற்சி முடியும் காலத்தில் மூவாயிரம் ரூபா பெறுமதியான உபகரணங்கள் இலவசமாக பயிற்சியாளர்களுக்கு வழங்கப்பட்டு வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். 06

## வட்டுக்கோட்டையில்

## புலிகளின் ...

தெரிவித்தார்.

இந்நிகழ்வு யாழ் இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் இடம்பெற்றது திரு. யோகரத்தினம் யோகி அவர்கள் இந்நிகழ்வுக்குத் தலைமை தாங்கினார்.

திரு. இளங்குமரன் தொடர்ந்து தமது உரையில் 1938இல் பிறந்த இவர் இவரது 19வது வயதில் 1958ஆம் ஆண்டு சிங்கள சிறீ ஊர்வலை எதிர்த்து மட்டக்களப்பு காவல்துறையினர் பெயர்ப் பலகையை அழித்த போது சிறிலங்கா காவல்துறையினரால் கடுமையாக சித்திரவதை செய்யப்பட்டார் இதனால் இவருக்கு காச நோய் பிடித்தது.

1976இல் விடுதலைப்புலிகள் இயக்கம் ஆரம்பமாகியதற்கு பத்து வருடங்களுக்கு முன்னரே மறவன்படைதான் புலிப்படை என்ற ஒரு சொல்லை ஒரு கவிதைமூலம் எடுத்துக் கூறி புலிப்படை தமிழீழத்தில் உருவாகும் என்பதை தீர்க்கதரிசனத்துடன் எடுத்துக் காட்டிய முக்கியமும் உணர்ந்த கவிஞராக உள்ளார்.

தமிழ் நாட்டில் ஈழத்தமிழருக்கு ஆதரவாக குரல் எழுப்பி ஈழத்தமிழரின் உணர்வை தமிழ்நாட்டு மக்களுக்கு எடுத்துக்காட்ட அடையாள உண்ணாவிரதத்தை அங்கு இருந்து காட்டினார்.

1965இல் தமிழன் கனவு நூல் அவரால் எழுதப்பட்டு 1968இல் நூல் வடிவு பெற்றது இன்று மூன்றாவது தடவையாக வெளிவருகிறது. 1972ஆம் ஆண்டில் புதிய குடியரசுசட்டத்தை எதிர்த்து தனது அரச பதவியை தூக்கி எறிந்தவர் இவர் ...

## கறுப்புப் பூனை ...

கைது செய்ய பிடி உத்தரவையும் அரசு பிறப்பித்தது.

இதையடுத்து அவர் தலைமறைவானார் கண்டியில் இவர் இரகசியமாக ஓர் இடத்தில் வைத்து செய்தியாளர்களை சந்தித்தார் தமது உயிருக்கு அரசினால் ஆபத்து எனவும் அப்போது அவர் கூறினார்.

## காரைநகரில்...

மூளாய், பொன்னாலை வெளிகளில் விழுந்த பீரங்கிக் குண்டுகள் பலத்த சத்தத்துடன் வெடித்து மக்களை பீதியடையச் செய்தன.

இக்குண்டுகளினால் பொருள் சேதமோ உயிர்ச்சேதமோ குறிப்பிடத்தக்க வகையில் இடம் பெறவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. 18

## பீப்பாய்

யாது என மீண்டும் அதிகாரிகள் தெரிவித்தனர்

வை-8 விமானம் குறித்து எழுப்பிய கேள்விக்கு விமானம் வீழ்ந்தமை குறித்த விசாரணை இன்னமும் முடியவில்லை எனவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

## இளாலி .

நிலை ஏற்பட்டுள்ளது.

இதனால் குடா நாட்டின் பல பகுதிகளிலும் இருந்து வரும் பயணிகள் பெரும் கஷ்டத்திற்குள்ளாகியுள்ளனர்.

காற்று நின்றதும் படகுச் சேவை வழமைபோல் நடைபெறும் என எதிர் பார்க்கப்படுகிறது

யாழ் நோக்கி வந்த சொண்டிருந்த பல பயணிகள் பூநகரி நல்லூரில் தங்கியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகி ... 29 06

## திருநாவுக்கரசு மகா வித்தியாலய விவசாய மனையியல் கண்காட்சி

வட்டுக்கோட்டை திருநாவுக்கரசு மகா வித்தியாலயத்தில் 'விவசாய, மனையியல் கண்காட்சி' ஒன்று இம்மாதம் 30ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9மணிமுதல் மாலை 4மணிவரை வித்தியாலய அதிபர் சைவப்புலவர் நா. தங்கரத்தினம் தலைமையில் நடைபெறவுள்ளது

பண்டத்தரிப்புக் கல்விக் கோட்ட பிரதிக்கல்விப்பணிப்பாளர் எஸ். வி மகேசவேல் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு கண்காட்சியைத் திறந்து வைத்து உரையாற்றுவார்.

யாழ் கல்வித்திணைக்கள உதவிக் கல்விப் பணிப்பாளர் (விவசாயம்) திரு வே. மகேந்திரன், உதவிக் கல்விப் பணிப்பாளர் (மனையியல்) திருமதி எஸ். சண்முகரத்தினம் வட்டுக்கோட்டை சொத்தணி அதிபர் திரு சின்னத்தம்பி டாக் ஆகியோர் சிறப்புவிருந்தினர்களாகக் கலந்து கொள்வார்கள். 18

## காற்றழுத்த மண்டலம் ஒரிஸாவைக் கடந்தது

வங்காள விரிகுடாவில் தோற்றிய காற்றழுத்த மையம் வடமேற்காக நகர்ந்து நேற்று இந்திய ஒரிஸா மாநிலத்தின் கரையை அடைந்தது.

தரைமீது இக்காற்றழுத்த மண்டலம் பலம் இழக்கலாம் என வானிலை அவதான நிலையம் அறிவித்தது.

காற்றழுத்த மையத்தினால் ஒரிஸா மாநிலத்தின் கரையோரப்பகுதிகளில் 50 முதல் 60 மைல் வேகத்தில் கடும் காற்று வீசியது ஆந்திர கடலோரப்பகுதியும் கொந்தளிப்பாக காணப்பட்டது

## காற்றினால சேதம்

தற்போது குடா நாட்டில் வீசும் கடும் காற்றினால் மீன்பிடித் தொழிலாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதேபோல வாழைத் தோட்டங்களில் பெரும்பாலான வாழைமரங்கள் முறிந்து கிடப்பதையும் காண முடிகிறது. 06, 47

## 'அன்னை இட்டதீ'

உள நலசேவை நிதிக்கும் மருத்துவ பீடமாணவர் ஒன்றி ...

## கோழிமுட்டைக்கு தட்டுப்பாடு

யாழ் நகரில் கோழிமுட்டைக்கு பெருந்தட்டுப்பாடு நிலவிவருகிறது வவுனியாவில் இருந்து முட்டைகள் வராததே இத்தட்டுப்பாட்டுக்கு காரணம் என வர்த்தகர் தெரி ...

# வட்டுக்கோட்டையில் மாவீரர் நினைவு விழா

சங்கானை வட்டவையைச் சேர்ந்த 12 மாவீரர்களுக்கான நினைவு விழா நேற்று வட்டு தொண்டேயம் பயிற்சிநிலைய முன்றலில் நடத்தப்பட்டது.

மேற்படி வட்டவையைச் சேர்ந்த ஆடி மாதத்தில் வீர மரணமடைந்த 12 மாவீரர்களதும் உருவப் படங்கள் பெற்றோரினால் மாலை சூட்டப்பட்டு கௌரவிக்கப்பட்டதை அடுத்து கூட்டம் இடம் பெற்றது.

இக்கூட்டத்தில் யாழ் மாவட்ட அரசியற் பொறுப்பாளர் நாவண்ணன், வலிகாமப் பொறுப்பாளர் திலீபன், மகளிர் முன்னணி பிரதிநிதி தாமரை ஆகியோர் சிறப்புரை நிகழ்த்தினர். பெருந்திரளான மக்கள் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர். 18

# இடம்பெயர்ந்தவர்களுக்கு நிவாரணம் கிடைக்கவில்லை

கடந்த 10ஆம் திகதி இளவாலையில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கையைத் தொடர்ந்து அப்பகுதி மக்களுக்கு இருவாரகால உலர் உணவு நிவாரணம் வழங்கப்படும் என செயலகம் அறிவித்தது.

ஆனால் இளவாலைப் பகுதியிலிருந்து பலர் வெளியிடங்களுக்கு இடம்பெயர்ந்து சென்றுள்ளதால் அந்த நிவாரணத்தைப் பெற முடியவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதேபோல வலி வடக்கில் இருந்து இடம்பெயர்ந்தவர்களுக்கும் நிவாரணம் சரியாக வழங்கப்படவில்லை என செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. 06

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷர்ஸ் (பிறைவேற்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் டச்சு வீதி கலவியங்காடு யாழ்ப்பாணம் லட்சுமி கட்டிடத்தில் உள்ள அச்சகத்தில் 28-07-92 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது

குடியரசுச்சட்டத்தை எதிர்த்து தனது அரச பதவியை தூக்கி எறிந்தவர் இவர். இதன் பின்னர் சிங்களச்சிறையில் ஐந்து ஆண்டுகள் இருந்தார்.

1976க்கு முன்னே ஆயுதப் போராட்டத்துக்கு இளைஞர்களை சேர்த்த இவர் தமது குடும்ப உறுப்பினர்களையும் விடுதலைப்போராட்டத்துக்கு இணைத்துள்ள உண்மையான தமிழ்ஞராக உள்ளார். இவரது உணர்ச்சிபூர்வமான கவிதைக்காக தமிழகம் கொடுத்த பணத்தையும் இயக்கத்துக்கு தமிழீழ விடுதலைப் போருக்கு வழங்கியுள்ளார்.

இவரது உணர்ச்சி பூர்வமான பாடல்களை பாடியதற்காக தமிழ்நாட்டில் தேனிசை செல்லப்பா சிறை சென்றதில் இருந்து இவரது பாடல்களில் உள்ள தமிழுணர்ச்சியை நாம் புரிந்துகொள்ளலாம் என்றார்.

இந்நிகழ்ச்சியில் தமிழீழ விடுதலைப்புலிகள் கலை பண்பாட்டுக்கழகத் தலைவர் திரு புதுவை இரத்தினதுரை பண்டிதர் பரந்தாமன் ஆகியோர் ஆய்வுரை நிகழ்த்தினார்கள்.

பெரும் தொகையான மக்களும் பாடசாலை அதிபர்கள் மாணவ, மாணவிகளும் பெருமளவில் பங்கு கொண்டனர். (12)

கரி நல்லூரில் தங்கியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. 29 06

## அயோத்தி ...

பாரம்பரியம் எதிர்த்து நிற்பதே இணங்கிப் போவதல்ல என்றார் காங்கிரஸ் என்ன பி ஜே பியின் கனவை நனவாக்க பாடுபடுகிறதா என அவர் பிரதமரை மறைமுகமாகத் தாக்கிப் பேசினார்.

இதைத் தொடர்ந்து உரையாற்றிய பிரதமர் நரசிம்மராவ் உறுதிக்கும் அசட்டுத் தனத்திற்கும் பாரதூரமான வேறுபாடு உண்டு என நாசூக்காகக் குறிப்பிட்டார்.

இதன் பின் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் அர்ஜுன் சிங், தாம் பிரதமரை பலவீனப்படுத்தும் மாறோ சவால் விட்டோ பேசவில்லை என்றார்.

காங்கிரஸ் கட்சிச் செயற்குழுத் தேர்தல் இவ்வருட ஆரம்பத்தில் நடந்த போது அதிக ஆதரவுடன் தெரிவு அர்ஜுன்சிங் தெரிவான போதிலும் பின்னர் செயற்குழுவிலிருந்து அர்ஜுன் சிங்கை பிரதமர் நீக்கி அவரை நியமன உறுப்பினராக நியமித்தார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

உள நலசேவை நிதிக்கும் மருத்துவ பீடமாணவர் ஒன்றியத்தின் நிதிக்குமென உள மருத்துவத்துறையினதும் நுண்கலைத் துறையினதும் ஆதரவுடன் மருத்துவபீட மாணவர் ஒன்றியம் வழங்கும் குழந்தை ம. சண்முகலிங்கத்தின் "அன்னை இட்ட தீ" என்னும் நாடகம் 29 ஆம் திகதி [illegible] மகளிர் கல்லூரி மண்டபத்திலும் 1 ஆம் 2 ஆம் திகதிகளில் கைலாசபதி கலை அரங்கிலும் மாலை 4 மணியளவில் நடைபெறும். 18

# விஞ்ஞானக் கண்காட்சி

யாழ். விஞ்ஞானச் சங்கமும் யாழ். பல்கலைக்கழகமும் இணைந்து நடத்தி வரும் விஞ்ஞானக் கண்காட்சி இம்மாதம் 22 ஆம் திகதி தொடக்கம் நடைபெற்று வருகின்றது.

இன்று இறுதி நாளாக இருப்பதாலும், மேலும் நீடிக்கப்பட முடியாமையினாலும் மாணவர்களுடன் ஏனையோரும் அனுமதிக்கப்படுவார்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இருந்து முட்டைகள் வராததே இத்தட்டுப்பாட்டுக்கு காரணம் என வர்த்தகர் தெரிவிக்கின்றனர்.

# நாய்க்கடி கருத்தரங்கு

வலிமேற்கு பிரதேச சபையினர் போரூட் ஸ்தாபனத்தினரின் அனுசரணையுடன் வட்டுக்கோட்டை பிரதேச சபை அலுவலகத்தில் இன்று காலை 9 மணியளவில் 'விசர் நாய்க்கடி அபாயத்திற்கான கருத்தரங்கு' ஒன்றினை நடத்தவுள்ளனர். (18)

# தபால் அடையாள அட்டைகள்

கரவெட்டி தபாலகத்திலும் அதன் உப-தபாலகங்களிலும் தபால் அடையாள அட்டைகளைப் பெற விண்ணப்பித்த மாணவர்களுக்கு அடையாள அட்டைகள் வந்துள்ளன.

இவ் அடையாள அட்டைகளைப் பெற விண்ணப்பித்தவர்கள் தாம் விண்ணப்பித்த தபால் நிலையங்களுடன் தொடர்பு கொண்டு அடையாள அட்டைகளைப் பெற்றுக் கொள்ளுமாறு கரவெட்டி தபாலதிபர் அறிவித்துள்ளார். 11